# கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் மக்களின் வாழ்வியல்

**முனைவர் சு. ரேணுகாதேவி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
ஜி.டி.என் கலைக் கல்லூரி
திண்டுக்கல்

தமிழில் எழுந்துள்ள வட்டாரப் புதினங்களில் குறிப்பிடத்தக்கது வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம். இது 2001ஆம் ஆண்டு நூல் வடிவில் வெளிவந்து 2003ஆம் ஆண்டு இந்திய அரசின் மிகச்சிறந்த விருதான சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது. இப்புதினம் 1958ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்ட வைகை அணையின் நீர்த்தேக்கத்திற்காக மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளிப்பட்டி, காமக்காபட்டி, கரட்டுப்பட்டி, பின்னதேவன்பட்டி, வடமலை நாயக்கன்பட்டி, சாவடிப்பட்டி, பசுக்காரன்பட்டி, சொக்கனூரு, மெட்டூரு, சக்கரப்பட்டி, குருவியப்பன்பட்டி, பன்னியான் வீடு ஆகிய பன்னிரண்டு ஊர் மக்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதைப் பதிவுசெய்கிறது. இத்தகைய பின்புலத்தைக் கொண்ட இப்புதினத்தில் அம்மக்களின் வாழ்வியல் பதிவு செய்யப்பட்டுள்ள விதத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கள்ளிக்காட்டு நில அமைப்பு**

மதுரை வட்டாரத்தில் இன்று வைகை அணை நீர்த்தேக்கத்தின் கீழ் இருக்கும் பன்னிரண்டு ஊர்களையே ஆசிரியர் அன்றைய நில அடிப்படையில் கள்ளிக்காடு என்கிறார். கள்ளிக்காடு என்பது மானாவரி நிலமாகும். மழை குறைவாகக் கிடைக்கும் பகுதி என்ற போதிலும் மழையை எதிர்நோக்கிப் பயிர் செய்யப்படும் செம்மண் நிலப்பரப்பாகும். இதனை,

**“அது ஐப்பசி மாதத்து ஆரம்பம். இந்த மழை மாதம்தான் அந்தக் கள்ளிக்காட்டுக்கு எத்தனை ‘சோபிதம்’ சுமந்து வருகிறது! செம்மண் காட்டில் பச்சைத் தீப்பிடித்த மாதிரி வளர்ந்து நின்றது சோளத்தட்டை”(க.கா.இ.பக்.39-40)** என்று கூறுவதிலிருந்து கள்ளிக்காட்டில் ஐப்பசி மாத மழைக்காலத்தில் மட்டும் பயிர்கள் செழிப்பாக இருப்பதை அறிய முடிகிறது. மேலும் கவிஞர் வைரமுத்து அங்குள்ள தாவரங்களையும் முதல் அத்தியாயத்திலேயே கோடிட்டுக் காட்டுகிறார்.

**“கருவேலமரம், பொத்தக்கள்ளி, கிலுவை, கற்றாழை, சப்பாத்திக்கள்ளி, இலந்தை, நெருஞ்சி, சில்லி, பிரண்டை, இண்டஞ்செடி, சூரான் கொடி முதலான வானத்துக்குக் கோரிக்கை வைக்காத தாவரங்களும்” (க.கா.இ.ப.15)** என்று கூறுவதிலிருந்து மழையை எதிர்பார்க்காமல் வளரும் தாவரங்களைக் கொண்ட பூமியில் செய்யக்கூடிய வேளாண்மை சிக்கல்களும் சிரமங்களும் நிறைந்தவை என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் கள்ளிக்காடு என்ற பெயரும் வேளாண்மைக்குப் பயனற்ற நிலங்களைக் குறிக்கும் குறியீடாகவே அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

**தொழில்**

சமூகத்தில் மனிதனுக்கு மதிப்பையும் மரியாதையையும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அதிகாரத்தையும் தேடித்தருவது தொழிலாகும். உயிர் வாழ்வதற்குத் தொழில் தேவை எனலாம். உலகத்தின் தொழில்களில் முதல் தொழிலும் முதன்மையான தொழிலும் உழவே ஆகும்.

கள்ளிக்காட்டுக் கலாச்சாரத்திலும் முதலிடம் வகிப்பது விவசாயத் தொழிலே ஆகும். இங்கு வாழும் பெரும்பான்மையான மக்கள் மண்ணை நம்பி வாழ்பவர்களாக இருக்கின்றனர். உழவு செய்வதற்கு வெயில், மழையென்று பாராது கடுமையாக உழைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இதனைக்,

**“கண்ணுக்கெட்டிய தூரம் வரை கானல் அலைகள் கதகதவென்று காய்ந்து கொண்டிருந்த அந்த முன்கோடை மாதத்தில் வெயிலை நிலாவெளிச்சமாய்க் கருதி உழுது கொண்டிருந்தார்கள் இரண்டு ஏர்க்காரர்கள். முன்னேர்க்காரர் பேயத்தேவர் தாத்தா. பின்னேர்க்காரன் மொக்கராசு; பேரன்”**

**(க.கா.இ.ப.16)** என்னும் கூற்று கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கள்ளிக்காட்டு மக்கள் உழைத்து வந்ததைப் புலப்படுத்துகிறது.

**வட்டார மொழிப் பயன்பாடு**

ஒரு வட்டாரத்தைத் தனியே பிரித்து இனங்காட்டுவது அதில் வாழும் மக்களின் வட்டார மொழி வழக்காகும். இன்றைக்கு நாஞ்சில் நாட்டாரையும், தஞ்சாவூர்க்காரரையும் கரிசலாரையும் கொங்கு நாட்டவரையும் மதுரை நாட்டவரையும் தனித்தனியே பிரித்து இனங்காட்டுவது வட்டாரப்பேச்சு வழக்கும் மொழிநடையும் பழக்கவழக்கங்களுமே ஆகும். உண்மையில் வட்டார இலக்கியம் உருவாவதற்குக் காரணமே பேசுவதுபோல எழுதவேண்டும் என்ற போக்குதான். வைரமுத்து ‘கள்ளிக்காட்டு இதிகாசத்’தில் மதுரை வட்டாரப் பேச்சுவழக்கை அதன் மண்மணத்தோடு கையாளுகிறார். விவசாயத் தொழிலை தங்களின் உயிர்நாடியாகக் கொண்டிருந்த தாத்தா பேயத்தேவரும் பேரன் மொக்கராசுவும் வயலில் உழவுப்பணியில் ஈடுபட்டிருந்தனர். தங்களின் மதியஉணவுக்குக் சோளப்பருக்கையும் நீர்மோரும் கலந்த சோளக்கஞ்சியும் தொட்டுக்கொள்ள கானத் துவையலையும் கொண்டு வந்திருந்தனர். கஞ்சியைத் தூக்குப்பாத்திரத்திலும் அதன் மூடியின் மேல் பகுதியில் கானத் துவையலையும் எடுத்து வருவது அவர்களின் வழக்கம். காகம் எப்பொழுதும் கானத் துவையலைக் கொத்தித்தின்றது போக மீதம் இருப்பதே மதியத்திற்கு அவர்களுக்குத் தொட்டுக் கொள்ள இருக்கும். மொக்கராசு காகத்திடமிருந்து கானத்துவையலைக் காக்க அன்று தூக்குப்பாத்திரத்தின் மேல்பகுதியில் துவையலை எடுத்து கொண்டு வராமல் பாத்திரத்தின் மூடியின் உள்பகுதியில் ஒட்டிக்கொண்டு வந்திருந்தான். அது நீர்மோர் கலந்த கஞ்சியில் கரைந்துவிடுகிறது. அதனைப் பார்த்த பேயத்தேவர் தன் பேரனின் அறிவுத்திறனை பழமொழி கலந்த மொழிநடையில் கேலி செய்வதைக் கீழ்க்கண்ட உரையாடல் விளக்குகிறது.

**“ஏலே கோணப் பயலே.... இதாட ஒஞ்சூச்சி? வெளிய அப்பி வச்சிருந்தாலும் காக்கா திண்டது போக மிச்சமிருந்திருக்கும். இப்ப உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணான்னு ஒக்காந்திருக்கியே”** **(க.கா.இ.ப.21)** எனவரும் உரையாடலில் மதுரை வட்டாரத்திற்கே உரிய பழமொழியைப் பயன்படுத்தி எழுதியுள்ளதால் இப்புதினம் யதார்த்த இலக்கியமாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

**மருத்துவம்**

கள்ளிக்காட்டில் பெண்களின் பிரசவம் அக்கிராமத்தில் மருத்துவச்சியாகச் செயல்படும் நாவிதர் குடிமகளாலேயே பார்க்கப்படுகிறது. பேயத்தேவரின் மகள் செல்லத்தாயின் பிரசவத்தைச் சொல்வதன் மூலம் ஆசிரியர் அப்பகுதி மக்களின் மகப்பேறு மருத்துவம் எவ்வாறு நிகழ்கிறது என்பதைக் காட்டுகிறார். நிறைமாத செல்லத்தாய்க்கு வலிவருகிறது. பேயத்தேவர் வீட்டிலேயே வேலை செய்யும் நாவிதர் குடிமகள் முருகாயிதான் மருத்துவச்சி. செல்லத்தாயிக்கு வலிவந்தது தெரிந்த முருகாயி, வந்தது பொய்வலியா? உண்மைவலியா? என்று அறிய நினைக்கிறாள்.

**“பிள்ளை பிறக்கும் வழித்தடத்தில் நிதானமாய்ச் சூதானமாய் விரல்விட்டுப் பார்த்தாள் முருகாயி. அளவு தெரியும் அவளுக்கு. ‘அது’ ஒரு விரல்’ ‘சுத்தளவு’ இருந்தால் ஒரு மாசம் ஆகும் பிள்ளை பெற. மூன்றுவிரல் சுத்தளவு இருந்தால் பதினெட்டு நாளாகும். ஆனால் செல்லத்தாய்க்கு ஐந்துவிரல் சுத்தளவு இருந்தது. இது ‘இன்னைக்கே இப்பவே’ என்கிற பிரசவ வலிதான். முடிவுக்கு வந்தாள் முருகாயி” (க.கா.இ.ப.80)**

உடனே வெந்நீர் தயாரித்து, வெள்ளைத்துணி தேடிப் பேறுகாலம் பார்க்கத் தயாராகிறாள். நீச்சல் அடிக்கும் பாவனையில் தலையை முன்நீட்டிய வண்ணம் குழந்தை பிறப்பதுதான் சுகப் பிரசவம் என்று எண்ணி உண்டான வலியை வேகப்படுத்தி உடனே பிரசவிக்கச் செய்யவேண்டும் என்று எண்ணினாள். இவ்வாறு கள்ளிக்காட்டில் பெண்களின் பிரசவத்திற்கு மேற்கொள்ளப்படும் மருத்துவ வழிமுறைகளைச் சித்திரிக்கிறார் படைப்பாளர்.

**பிடிமண் எடுக்கும் வழக்கம்**

ஒரு தெய்வத்தை வழிபடும் மக்கள் பஞ்சம், பகை காரணமாக வேறு ஊர்களுக்குக் குடிபெயர்ந்து செல்கையில், தாம் வழிபட்டு வந்த தெய்வங்களையும் பிடிமண் மூலம் கொண்டு செல்வர். இது தெய்வ வழிபாட்டில் காணப்படும் முறையாகும். ஆனால் கள்ளிக்காட்டு மக்கள் தங்கள் மண்ணையே தெய்வமாகக் கருதி வாழ்ந்தவர்கள். இவர்கள் புலம்பெயர்ந்து செல்லவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்ட போது வேறு ஊர்களில் சென்று வாழும் சூழ்நிலையில் வீடோ, கோயிலோ கட்டும் போது தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணைப் போட்டுக் கட்ட வேண்டும் என்ற ஆதங்கத்தில் பிடிமண் எடுத்துச் செல்கின்றனர். இதனைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார் வைரமுத்து.

**“சீமவிட்டுச் சீமபோயிப் பொழைச்சாலும், கண்டம் விட்டுக் கண்டம் போயிப் பொழைச்சாலும் பொறந்த மண்ணோட புடிமண்ணு வேணுமா இல்லையா! இந்த ஊர்லயே பெரிய மனுசன் யாரு? இந்த மண்ணுல எங்களுக்கு முன்னுக்கப் பெறந்த மூத்த ஆளு யாரு? நீதானப்பா! ஒங்கையி வாழ்ந்த கையப்பா! வளமான கையப்பா! ஒங்கையால புடிமண்ணெடுத்துப் போடு. மடியில வாங்கிக்கிர்றோம். பொழைக்கப் போற எடத்துல புடி மண்ணப்போட்டு வீடோ கோயிலே கட்டிக்கிர்றோம். நாளப்பின் வந்து புடிமண்ணு எடுக்கவும் இந்த பூமி இருக்குமோ இருக்காதோ? போடப்பா! புடிமண்ணு எடுத்துப் போடப்பா!” (க.கா.இ.பக்.358-359)** என்னும் கூற்று வாழ்ந்து முடித்த வளமான கைகளினால் பிடிமண்ணை வாங்குதல் வேண்டும் என்ற நம்பிக்கையும் இம்மக்களிடம் வழங்குவதைக் காட்டுகிறது.

**சடங்கு முறைகள்**

பிறப்புமுதல் இறப்புவரை மனிதனின் வாழ்க்கை பல்வேறு சடங்குகளால் கட்டுண்டு கிடக்கின்றது. ‘முன்னோர் செய்த செயல்களைக் காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கின் முறை’ எனலாம்.

கிராம மக்களிடையே பல்வேறு சடங்குகள் காலங்காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளன. 1. பிறப்புச் சடங்கு, 2. ஏற்புச் சடங்கு, 3. திருமணச் சடங்கு, 4. இறப்புச் சடங்கு என இவற்றை வகைப்படுத்தலாம். இச்சடங்குகள் அனைத்தும் வாழ்வைப் பல தொடர்நிலைகளாகப் பிரித்து ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மக்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**பிறப்புச் சடங்குகள் - சேனை வைத்தல்**

குழந்தைப் பிறந்தவுடன் முதன் முதலில் விளக்கெண்ணெய் அல்லது சர்க்கரை கலந்த நீரைச் சிறிய கரண்டி அல்லது சிறிய குச்சியில் துணியைச் சுற்றி எடுத்துக் குழந்தையின் நாவில் இடுவர். இதனையே சேனை வைத்தல் என்பர். ‘சேனைப்பால்’ கொடுத்தப் பின்னரே தாய் குழந்தைக்குப் பாலூட்டுகிறாள்.

முதன்முதலில் சேனை வைப்பவர் செல்வத்திலும் கல்வியிலும் சிறப்புடையவராக இருக்க வேண்டுமென்று அனைத்துச் சமுதாயத்தினரும் விரும்புகின்றனர். சிறப்புடைய ஒருவர் சேனை வைத்த பின்னர் குழந்தையின் தந்தைவழிப் பாட்டன், பாட்டி, தாய்வழித் தாத்தா, பாட்டி, தாய்மாமன் எனத் தொடர்ந்து சேனை வைப்பர். அதன் பின்னர் தந்தை சேனை வைப்பார். சேனை வைக்கும் பொழுது சேனை வைப்பவர் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார்.

**வீட்டுப் புத்தி போய் காட்டுப் புத்திவா**
**காட்டுப் புத்தி போய் வீட்டுப் புத்திவா**
**உன் புத்தி போய் என் புத்தி வா’**

இவ்வாறு சொல்வது பெரும்பான்மைச் சமூகத்தில் இருப்பதாக அறிய முடிகிறது.

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் பேயத்தேவரின் மூத்தமகள் செல்லத்தாயிக்குப் பிறந்த குழந்தைக்குச் சேனை தொட்டு வைக்கும் சடங்கு செய்யப்படுவதை நயம்பட எடுத்துரைக்கிறார் ஆசிரியர். இவர்கள் வசம்பின் நுனியில் எண்ணெய் தொட்டு வைக்கும் வழக்கம் கொண்டிருந்ததைக் காட்டுகிறார் வைரமுத்து. இதனை, **“வசம்பின் நுனியில் எண்ணெய் தொட்டு குழந்தையின் வாயில் மூன்று முறை வைப்பார்கள் மூத்தவர்கள். ஒவ்வொரு முறை தொட்டு வைக்கும்போதும் ‘ஓம்புத்தி**

**போயி எம்புத்தி வா' என்று சொல்லி வைப்பது மரபு''(க.கா.இ.ப.83)** என்னும் கூற்று உறுதி செய்கிறது.

**ஏற்புச் சடங்கு**

ஏற்புச் சடங்கானது இளம் பருவத்திலிருந்து (Child hood) பருவ வயதடையும் (adult hood) நிலைக்கு மாறுவதைக் குறிக்கவே நிகழ்த்தப்படுகிறது.

**"வயது அடிப்படைக் குழுக்களைக் கொண்ட சமுதாயங்களில் இளைய குழந்தைகள் பருவ வயதடையும் போது அவற்றிற்கு ஏற்புச் சடங்கினைச் செய்வர். இவ்வகைச் சடங்குகள் பெரும்பாலும் ஆண்களுக்குச் செய்யப்படுகின்றன... இச்சடங்கின் முதல் கட்டமாகப் பருவ வயதடைந்த ஆண்பிள்ளைகளைப் பெண்களிடமிருந்தும், குழந்தைகளிடமிருந்தும் முதலில் தனிமைப்படுத்தி இரவுக் காலங்களில் உண்ணாமல் விரதமிருக்கச் செய்வர். இதன் பிறகு அவர்களுக்கு உடல் வருத்தும் செயல்களும் இரத்தம் சிந்தும் செயல்களும் செய்யப்படுகின்றன. இறுதியில் இனக்குறியின் நுனித்தோல் நீக்கம் செய்யும் சடங்கு நடைபெறுகிறது. அவர்கள் இவையனைத்திலும் தாக்குப்பிடிக்கும் திறனை அடைவதால் வாலிபர்களாகச் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்'' (பண்பாட்டு மானுடவியல், பக்தவத்சல பாரதி, ப.379)** என்று ஏற்புச் சடங்கினைக் குறித்து விளக்குகிறார் பக்தவத்சல பாரதி.

கள்ளிக்காட்டுக் கலாச்சாரத்தில் ஆண்களுக்குச் செய்யப்படும் இந்த ஏற்புச் சடங்கானது 'மார்க்க கல்யாணம்' என்று வழங்கப்படுகிறது. இது திருமணம் மாதிரியே நிகழ்த்தப்படுகிறது. 'கள்ளிக்காட்டு இதிகாசத்'தில் பேயத்தேவரின் பேரன் மொக்கராசுக்கு நடைபெற்ற மார்க்க கல்யாணத்தைப் படம் பிடிக்கிறார் வைரமுத்து.

**"கல்யாணத்துக்கு மாதிரியே பந்தல்போட்டுத் தோரணம் கட்டிக் கொட்டடிச்சுக் குலவையிட்டு ரேடியோக் குழாய்க் கட்டிப் பாட்டுப் போட்டு சலம்பலோடதான் அதுவும் நடக்கும்.... ஆட்டுத் தலய வெட்டித் தோலுரிப்பாக. இதுல ஒரு உறுப்போட தலய மட்டும் தோலுரிக்கிறாக.... ஒரு வயசுப் பயலுக்கு ஒரு நாவிதரு அந்த தோல வைத்திய முறைப்படி நீக்கிவிடற வைபவந்தான் மார்க்க கல்யாணம்''. (க.கா.இ.ப.280)** இது கள்ளிக்காட்டில் பருவ வயதை வந்தடையும் நிலையில் இளைஞர்களுக்குச் செய்யப்படும் ஏற்புச்சடங்கான மார்க்க கல்யாணத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. இச்சடங்கினைச் செய்யாவிட்டால் 'சாமி குத்தம்' வந்துவிடும் என்ற நம்பிக்கையும் இம்மக்களிடம் காணப்படுகிறது.

**திருமணச் சடங்குகள்**

மனித வாழ்க்கையில் 'திருமணம்' என்னும் வாழ்வியல் சடங்கிற்கு மிகமுக்கியமான இடம் உண்டு. **"இந்தியாவில் திருமணம் என்பது, தெய்வீகத் தன்மை அடைவதற்குரிய புனிதவழி என்றும், அதனை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்படுவனவே சடங்குகள்'' (தமிழ்க்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள், யோகீசுவரன், ப.228)** என்றும் யோகீசுவரன் குறிப்பிடுகின்றார்.

கள்ளிக்காட்டில் மக்கள் உழைப்பையே நம்பி வாழும் மக்கள். ஆதலால் அவர்களின் வசதிக்கு ஏற்ப இரவில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மணப்பெண்ணை வாழ்வரசிகள் சூழ அழைத்து வருதல், மணமக்களைத் திருமணப் பந்தலில் கிழக்கு பார்த்து அமர வைத்தல் போன்ற சடங்குகள் இம்மக்களிடம் காணப்படுகின்றன. 'கள்ளிக்காட்டு இதிகாசத்'தில் பேயத்தேவர் மகள் செல்லத்தாயிக்கு நடைபெற்ற திருமணத்தைக் காட்சிப்படுத்துகிறார் வைரமுத்து.

**"கொட்டுச்சத்தம் ஊர்பிளக்க-குலவைச்சத்தம் வான் கலக்க-பாறைகள் கசிவதுபோல் பேயத்தேவரும் அழகம்மாவும் கண்கசக்க தாலிகட்டி, மாலைமாற்றி ஊர் பெருசுகளின் காலில் விழ, அவர்கள் மணமக்களுக்கு நெற்றியில் திருநீறு இழுக்கிவிட முடிந்தது சடங்கு'' (க.கா.இ.ப.46)** என்னும் கூற்று கள்ளிக்காட்டில் நடைபெற்ற திருமண முறையைப் பதிவு செய்துள்ளது.

**இறப்புச் சடங்கு**

இறப்பு என்பது மனிதனால் தவிர்க்க இயலாத, வாழ்க்கையில் இறுதி நாட்களில் வரக்கூடிய நிகழ்ச்சியாகும். இவ்விறப்பின் போது பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. கள்ளிக்காட்டில் நடைபெற்ற இறப்புச் சடங்கினை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் வைரமுத்து. பேயத்தேவரின் மனைவி அழகம்மாவின் இறப்பினைக் காட்டும் போது கள்ளிக்காட்டில் பிணங்களுக்குச் செய்கிற கலாச்சாரம், பண்பாட்டு முறைகளைத் தெளிவுற எடுத்துக் காட்டுகிறார்." (க.கா.இ.பக்.110-118) இச்சடங்கில் இறந்த அன்று செய்யும் சடங்குகள், சுடுகாட்டில் செய்யும் சடங்குகள், புதைத்தப் பின் செய்யும் சடங்குகள் என மூன்று நிலைகளைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

இறப்புச் சடங்கில் பிறவட்டார மக்களின் கலாச்சாரத்தில் இருந்து வேறுபடும் விதமாக கள்ளிக்காட்டில் பெண்கள் இடுகாட்டில் கொல்லிக்குடம் உடைக்கும் வழக்கம் காணப்படுவதை வைரமுத்து இப்புதினத்தில் பதிவு செய்கிறார்.

கள்ளிக்காட்டு வட்டாரத்தில் ஒரு மனிதனின் பிறப்புமுதல் இறப்புவரை பல்வேறு சடங்குமுறைகள் நிகழ்த்தப்படுவதனைக் காணமுடிகிறது. இதில் நாவிதரின் கடமை இன்றியமையாததாக அமைகிறது. காதுகுத்தும் சடங்கிலும், மார்க்க கல்யாணத்திலும், இறப்புச் சடங்கிலும் நாவிதர் முன்னின்று சடங்குகளை நிகழ்த்துவதைக் 'கள்ளிக்காட்டு இதிகாசம்' வெளிச்சப்படுத்துகிறது. **"தாழ்த்தப்பட்ட சாதிகளுள் அதிகம் பிராமணத்துவம் பெற்ற சாதி நாவிதர் சாதி" (Edgar Thurston, castes and Tribes of south India, Vol.I, P.38.)** என்ற எட்கர் தர்ஸ்டன் கூற்றை இது மெய்ப்பிக்கிறது.

**முடிவுரை**

வைகை அணை நீர்த்தேக்கத்திற்காகத் தங்கள் வாழ்விடத்தை விட்டு புலம்பெயர்ந்து சென்ற பன்னிரண்டு ஊர் மக்களின் வாழ்வியலை விளக்கும் புதினமாகக் கள்ளிக்காட்டு இதிகாசம் அமைந்துள்ளது. இம்மக்கள் வாழ்ந்த நிலஅமைப்பு மழையை எதிர்பார்த்து வளம் கொழிக்கும் வானம்பார்த்த பூமி. மழை இல்லை என்றால் வேளாண்மைக்குப் பயனற்ற நிலம் என்பதைக் குறிக்கவே 'கள்ளிக்காடு' என்ற குறியீட்டுப் பெயரை ஆசிரியர் இப்புதினத்திற்குச் சூட்டியுள்ளார் என்பதை இவ்வாய்வின் மூலம் உணரமுடிகிறது. இத்தகைய நிலஅமைப்பைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்ட கள்ளிக்காட்டு மக்கள் வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டு கடின உழைப்பு செய்து வாழ்ந்தனர் என்பதனையும் அவர்களது பேச்சுவழக்கு மதுரை வட்டாரத்திற்கே உரிய பழமொழியும் உவமையும் கலந்த இயல்பான நடை என்பதனையும் அவர்களிடம் காணப்பட்ட மகப்பேறு மருத்துவமுறையையும் இவ்ஆய்வு எடுத்தியம்புகிறது. மேலும் பிற வட்டார மக்களிடமிருந்து வேறுபட்டு காணப்படும் கள்ளிக்காட்டு மக்களின் பழக்கவழக்கங்களையும் சடங்குமுறைகளையும் பதிவுசெய்து பாதுகாக்கும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகக் கள்ளிக்காட்டு இதிகாசம் புதினம் விளங்குவதை இவ்வாய்வு உறுதி செய்கிறது.

**துணை செய்த நூல்கள்**


1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2003
2. யோகீசுவரன், தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள், நீலா பதிப்பகம், சென்னை,1982
3. Edgar thurston, Castes and Tribes of south India,Vol.I, Cosmo Publications, Delhi,1975